செய்தி வெளியீடு எண்: 67/2026 **நாள்: 13.10.2026**

பத்திரிகைச் செய்தி

சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம்-II, வழித்தடம் 5-ல் (உள்ளகரம் - சோழிங்கநல்லூர்) உயர்மட்ட வழித்தடத்தில் முன்கூட்டியே வார்க்கப்பட்ட கான்கிரீட் கட்டுமானப் பணியில் (Precast Construction) ஒரு முக்கிய மைல்கல்லை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் எட்டியுள்ளது

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் பொது ஆலோசகரான 'AEON கன்சார்டியம்' மற்றும் ஒப்பந்ததாரரான HCC-KEC கன்சார்டியம் இணைந்து, சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் கட்டம்-II, வழித்தடம் 5 ECV-03 உள்ளகரம் முதல் சோழிங்கநல்லூர் வரையிலான கட்டுமானப் பணியில், இறுதி 'யு-கார்டர்' (U-Girder) வார்க்கும் பணியை வெற்றிகரமாக முடித்து, அனைத்து முன்கூட்டியே வார்க்கப்பட்ட கூறுகளையும் (Precast Elements) 100% நிறைவு செய்து ஒரு முக்கிய மைல்கல்லை எட்டியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் ஒட்டுமொத்தமாக 3,126 முன்கூட்டியே வார்க்கப்பட்ட கூறுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இதில் 1,041 ஐ-கார்டர்கள், 892 யு-கார்டர்கள், 871 பியர் ஆர்ம் செக்மென்ட்கள், 303 பியர் கேப்கள் மற்றும் 19 போர்ட்டல் ஷெல்கள் அடங்கும். வார்க்கப்பட்ட 892 யு-கார்டர்கள் மூலம், கட்டம்-2 திட்டப் பணிகளிலேயே அதிக அளவில் யு-கார்டர்கள் தயாரித்த சாதனையை இத்திட்டம் பதிவு செய்துள்ளது. இது முன்கூட்டியே வார்க்கப்பட்ட கட்டுமானப் பணிகளின் அளவையும், குறிப்பிடத்தக்க உற்பத்தி மைல்கல்லையும் பிரதிபலிக்கிறது.

இந்த கட்டுமானப் பணிகளுக்காக 98,052 கன மீட்டர் கான்கிரீட், 18,550 மெட்ரிக் டன் கம்பிகள் (Reinforcement steel) மற்றும் 3,010 மெட்ரிக் டன் அதிவலிமை எஃகு கம்பிகள் (HT Strands) பயன்படுத்தப்பட்டுள்ளன.

சிக்கலான உயர்மட்ட உள்கட்டமைப்பு பணிகளைச் செயல்படுத்துவதில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், AEON கன்சார்டியம் மற்றும் HCC-KEC கன்சார்டியத்தின் கூட்டு முயற்சிகள், பொறியியல் நிபுணத்துவம், சிறப்பான திட்டமிடல் மற்றும் திறமையான ஒருங்கிணைப்பு ஆகியவற்றை இந்தச் சாதனைகள் பிரதிபலிக்கின்றன. இந்நிகழ்ச்சியில், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் திட்ட இயக்குநர் திரு. தி. அர்ச்சுனன், கூடுதல் பொது மேலாளர் திரு. ஆர். சீனிவாசன், AEON கன்சார்டியத்தின் குடியிருப்புப் பொறியாளர் திரு. எம்.பி. முத்தையா, HCC-KEC கன்சார்டியத்தின் உயர் துணைத் தலைவர் மற்றும் வணிகப் பிரிவு தலைவர் திரு. ஜெய்தீப் ராஜேஷ்வர்கர், திட்ட மேலாளர் திரு. லாலிச்சன் அந்தோணி, வார்ப்பு முனையப் பொறுப்பாளர் திரு. ஹரி கிருஷ்ணா

மற்றும் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், AEON கன்சார்டியம், HCC-KEC கன்சார்டியம் ஆகிய நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்துகொண்டனர்.

இறுதி யு-கார்டர் வார்ப்பு பணி வெற்றிகரமாக முடிவடைந்ததைத் தொடர்ந்து, மீதமுள்ள யு-கார்டர்களைப் பொருத்தும் பணி மற்றும் நுழைவு/வெளியேறும் அமைப்புகளின் கட்டுமானப் பணிகள் தற்போது விரைவுபடுத்தப்பட்டு, சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம்-2 குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்கப்படும் வகையில் முன்னேறி வருகிறது.

வெளியீடு: கூடுதல் இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,
சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600 035.